

# சிற்பியின் சுதந்திரம்

இந்திரன்

தமிழகத்தில் காணப்படும் மரபுச் சிற்பங்களின் மொழி என்பது தீர்க்கமான இலக்கண வரையறைகளைக் கொண்டது. புராண விஷயங்கள் இந்திந்த வகையில்தான் சித்தரிக்கப் பட வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. நரசிம்ம அவதார சிற்பம் என்றால் அது இரண்யனை மடியில் போட்டு, அவனது வயிற்றை நகத்தால் கிழிப்பது போலத்தான் அமைக்க் வேண்டும். அப்படி அரசனும், மதகுருவும் கட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள் சிற்பியின் சுதந்திரத்தை. ஆனால் இந்தக் கட்டுப்பாட்டை மீறியும் சிற்பி சாதனைகள் புரிந்திருக்கிறான்.


இத்தகைய ஒரு கலைச் சாதனைதான் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலிலுள்ள இரண்ய வதைச் சிற்பம். இந்தச் சிற்பத்தில் இரண்யனோடு நரசிம்மர் மற்போர் புரிகிறார். இது மிகவும் அபூர்வமானது.

நரசிம்மர், ஒரு கையால் வாளை ஓங்கும் இரண்யனின் ஒரு கையைப் பிடித்து இருக்கிறார். இன்னொரு கையில் இரண்யனின் தலைமுடியைப் பிடித்து நிறுத்துகிறார். ஒரு கையால் இரண்யனை அறைகிறார். இன்னும் ஒரு கை பிரகலாதனை ஒரு புறமாகத் தள்ளுகிறது. மற்றொரு கை ஏதும் செய்யத் தேவையற்ற மகிழ்ச்சியில் துள்ளுகிறது. கைகள் நிறுத்தப்பட்ட நிலையில் இரண்யன் தனது கால் முட்டியால் நரசிம்மரின் மர்ம ஸ்தானத்தில் தாக்க முனைகிறான். ஆனால் அதற்குள்ளாகவே நரசிம்மரின் கால் முட்டி இரண்யனின் மர்மஸ்தானத்தைத் தாக்கி விடுகிறது.

இத்தகைய அபூர்வ சிற்பச் சாதனையை நிகழ்த்துவதற்கான சுதந்திரம் சிற்பிக்கு எப்படிக் கிடைத்தது?


இதைச் செய்யப் பணித்தவர் யார்? பல்லவ மாமன்னன்! பல்லவர்கள் மற்போரில் தேர்ந்தவர்கள். எனவே மாமல்லர்கள். அதனால் அரசர்களுக்கு மிகவும் பிடித்த மற்போரை நரசிம்மர் செய்யுமாறு காட்சியை அமைத்து சிற்பி தனக்கான புதிய வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பெறுகிறான். இதுதான் சிற்பியின் சாதனை.

Kumudam Theeranadhi R.Dis.No. 3424/01/RNI Ref.No.TNTAM/14261/2002



சிற்பங்களில் அசைவுகள்: மகாபலிபுரம்

# அழகே உன்னை ஆராதிக்கிறேன்



இந்திரன்

அழகைப் பற்றி ஆராய் வதற்கு அழகியல் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

ஆனால் அழகில் தமிழ் அழகு, இங்கிலீஷ் அழகு, கன்னட அழகு, கேரள அழகு என்று கம்பார்ட்மெண்ட்கள் உண்டா?

உண்டு என்கிறார்கள் கலை விமர்சகர்கள். குறிப்பாக, சிற்பத் துறையில் தமிழ் அழகியல் என் பது ஒரு தலையணை சைஸ் சப் ஜெக்டாம்!

தமிழ்நாட்டின் முக்கிய கலை



வெளிப்பாடு சிற்பம். குகைக் கோயில்களில் தொடங்கி தமிழ்நாட்டிற்கு உலக அளவில் பெயர் வாங்கிக் கொடுத்த செப்புத் திருமேனிகள் வரை மரக்கடைசல் சிற்பங்களிலிருந்து சுடுமண் சிற்பங்கள் வரை தமிழ் மண் முழுவதும் சான்றுகள் ஏராளம். ஆனால் இந்த அழகுமிகு சிற்பங்களின் மௌனத்திற்குள் ஒரு மிகப்பெரிய சோகம் உறைந்திருக்கிறது. இந்த சிற்பங்களைச் செய்தவரின் பெயர்? அவர்கள் நெட்டையா? குட்டையா? கறுப்பா? சிவப்பா? எல்லாம் மர்மம்தான்.

**இந்தச் சிற்பங்களைச் செய்தவர்கள் யார்? அவர்களின் பெயரென்ன? நெட்டையா, குட்டையா?**

ஆனால் இந்தப் படைப்புகளில் சிற்பிகளின் பண்பாடு, வாழ்க்கை முறை, உணவுப் பழக்கம், ஆன்மிகம் என்று எல்லாமே புதைந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் ஒரு புத்தகத்தில் வாசிப்பது போல வாசிக்கிற கலை வல்லுநர்கள் இவற்றுக்குள் ஓடுகிற அழகியல் எது? என்று கேட்கிறார்கள். இதன் சாரம்தான் தமிழ் அழகியல்!

'சிவ நடனம்' (Dance of Siva) என்ற, டாக்டர். ஆனந்த குமாரசாமியின் நூல் அழகியல் கேள்விகளுக்கு இந்தியப் பண்பாட்டுப் பின்னணியில் பதில்களைத் தருகிறது. இதைப்போல தமிழ்ப் பண்பாட்டுப் பின்னணியில் தமிழகத்துச் சிற்பங்ளைப் பார்க்கிறபோது அந்தச் சிற்பங்களுக்கே என்று தனியான ஒரு கலை அடையாளம் இருப்பதைக் காணலாம். அதுதான் தமிழ் அழகியல்.

அதென்ன தமிழ் அழகியல்? "நமது சிற்பங்களைப் புரிந்து கொள்வதற்கு நமக்கென்று தனியான அழகியல் அளவுகோல்கள் தேவை. மேற்கத்திய அளவுகோல்களை வைத்து சிற்பங்களையும், கோயில்களையும் அளந்தால் விபரீதமான விளைவுகள் ஏற்படும்" என்கிறார் கலை விமர்சகர் இந்திரன்.

"மேலை நாட்டு விமர்சகர் ஒருவர் நமது கோயில் கட்டடக் கலை முற்றிலும் தவறானது என்கிறார். உண்மையில் தமிழ்க் கோயில்களின் அமைப்பு படுத்திருக்கும் ஒரு மனித உடம்பை அடிப்படையாகக் கொண்டது என்கிற விஷயஞானம் இல்லாததால்தான் அவர் அப்படிச் சொல்ல நேர்கிறது. இதைத் தவிர்க்க வேண்டுமானால் நமக்கென்று இருக்கிற தமிழ் அழகியலை ஒரு மறு கண்டுபிடிப்பு செய்ய வேண்டும்" என்கிறார் இவர்.


தமிழர்களின் சிற்பங்கள், நடனத்தின் அபிநய மொழியைச் சார்ந்து இயங்குகின்றன. ஒவ்வொரு சிற்பத்திற்கும் தனித்தனியான





தாள அளவுகள் உண்டு. இந்த அளவுகளை மிகவும் நுணுக்கமாக உருவாக்கி இருக்கிறார்கள். ஓர் அணு எவ்வளவு சிறியதோ அந்த அடிப்படையில் அளவுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

"தமிழ் அழகியல் வெற்று யதார்த்தம் அல்ல. அது யதார்த்தத்தைக் கடந்த வேறொன்று என்கிறார்கள் கலை விமர்சகர்கள். தமிழ் அழகியல் நுட்பத்தை மகாபலிபுரத்தில் உள்ள அர்ஜுனன் தவம் சிற்பங்களில்



காணமுடிகிறது. அந்தச் சிற்பங்களில் பறக்கும் உருவங்களான தேவர்கள், கின்னரர்கள், கின்புருடர்கள் போன்றவர்களுக்குச் சிறகுகள் கிடையாது. ஆனால் அவர்கள் காலை மடக்கி, கைகளை நீந்துவது போல வைத்திருக்கும் பாவனையிலேயே அவர்கள் பறக்கிறார்கள் என்பதை உணர்த்தி வருகிற கலை நுட்பம்தான் தமிழ் அழகியல்" என்கிறார் இந்திரன்.

எதையும் உடல் சார்ந்த மொழியின் மூலமாகவே விவரித்து வரும் தமிழ் அழகியலை முதன்மைப்படுத்தும் பார்வையில் முதலில் டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் ஒரு சிறு முயற்சியைத் தொடங்கி வைத்தார். அம்முயற்சி இன்னும் தீர்ந்துவிடவில்லை. கலையின் நோக்கம், பார்வை ரீதியான அனுபவம், அந்த அனுபவத்தில் உள் நுழைந்து அதன் ஆழ அகலங்களைத் தேடுகிற அழகியல் முயற்சிகள் இதில் தொடங்குகின்றன.

இந்தத் தேடலுக்குத் தனி முயற்சிகள் போதாது. தமிழ்ப் புரிதலுடன் கூடிய கலை இயக்கங்கள் தோன்ற வேண்டும்.

- சுந்தரபுத்தன்